**நிகழும் சோபகிருது வருடம் ஆனி மாதம் 15 ஆம் நாள் (30.06.2023) வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் நன்பகல் 12.30 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நல்லிபாளையம் கிராமம் சர்வே எண்.114/3இல் 1.58 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.கே.செந்தில்குமார் மற்றும் ஐவர் ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணபித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.439/2022 நாமா, நாள்.26.04.2022 ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் தர ஆய்வு செய்து (Third Party Inspection) சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதிகள், மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள், 6 தெருவிளக்குகள், குடிநீர் பகிர்மான குழாய் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை 15.03.2022ஆம் தேதிய தானபத்திரம் எண்.1162இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கீழ்கண்ட தொகைகள் செலுத்த வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் (1.58) ஏக்கர் | ரூ.20,000/– |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ.1000/– |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ.1000/– |
| 4 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ.2000/– |
| 5 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம்<br>(1 இலட்சம் / 1 ஏக்கர்) | ரூ.1,60,000/– |
| 6 | சந்தை மதிப்பு கட்டணம் 3% | ரூ.5,16,200/– |
| | மொத்தம் | ரூ.7,00,200/– |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.439/2022நாமா, நாள்.26.04.2022இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(நாமா) எண்.77/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்பு, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.1445/2022/எப்1**

**தீர்மானம் எண் : 453, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம் சர்வே எண்.47/1B2, 47/3B2,4B1B,5A2,5B2இல் 0.8425 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.S.அரவிந்தன் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணபித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.421/2023 நாமா, நாள்.25.05.2023 ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு

சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் தர ஆய்வு செய்து (Third Party Inspection ) சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதிகள், மற்றும் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பைப்லைன் வசதி, சோளார் மின்விளக்கு ஆகியவை நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை **25.04.2023**ஆம் தேதிய தானபத்திரம் எண்.**2100**இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கீழ்கண்ட தொகைகள் செலுத்த வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் (0.8425) ஏக்கர் | ரூ.10,000/– |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ.5000/– |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ.1000/– |
| 4 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ.1000/– |
| 5 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.1,30,000/– |
| 6 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம்<br>( 1 இலட்சம் / 1 ஏக்கர்) | ரூ.1,00,000/– |
| 7 | சந்தை மதிப்பு கட்டணம் 3% | ரூ.5,51,025/– |
| | **மொத்தம்** | **ரூ.7,98,025/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**421/2023**நாமா, நாள்.**25.05.2023**இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ (நாமா) எண்.**170/2023** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்பு, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.**2473/2023**/எப்1

**தீர்மானம் எண் : 454, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 3 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு A, பிளாக் **5,6** நகரளவு எண்.**33**/7,3/22 இல் 2.23 3/4 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.செந்தில்குமார் மற்றும் இரண்டு நபர்கள் ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணபித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.NKL/BH9IZXOI/9955/2022/TCP, நாள்.**17.05.2023**ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்ச்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் தர ஆய்வு செய்து (Third Party Inspection ) சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதிகள், மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை **21.04.2023**ஆம் தேதிய தானபத்திரம் எண்.**1745**இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கீழ்கண்ட தொகைகள் செலுத்த வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.4,00,000/– |
| 2 | குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.3,40,000/– |
| 3 | மனைப்பிரிவு கட்டணம் (2.23 3/4) ஏக்கர் | ரூ.25,000/– |
| 4 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ.12,500/– |
| 5 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ.1000/– |
| 6 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ.2000/– |
| 7 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ.2,25,000/– |
| **மொத்தம்** | | **ரூ.10,05,500/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.NKL/BH9IZXOI/9955/2022/TCP, நாள்.17.05.2023இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.184/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி மனைப்பிரிவிற்கான தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் தெருவிளக்கு வசதி அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை, பராமரிப்பு வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு, மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.3056/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 455, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4:**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34 முல்லை நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம் பூங்கா அமைக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளதை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற அலுவலகம் அருகில் உள்ள பாறைகளை உடைத்து அப்புறபடுத்த அறிவுரை வழங்கியுள்ளார். இப்பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3996 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 456, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5:**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 சிவஞானம் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளதால் அவற்றை இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட ஆழ்துளை கிணற்றில் புதியதாக 7.5ஹச்.பி நீர்மூழ்கி மோட்டார் மற்றும் அதற்கான உதிரி பாகங்கள் பொருத்த வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் நிதியின் நிதிநிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3941 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 457, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6:**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 கொண்டிசெட்டிப்பட்டி பகுதியில் வேட்டைகவுண்டன்புதூர் சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை அமைப்பு குடிசை மாற்றுவாரிய குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள Pumping station இல் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் குடியிருப்பு அதிகரித்து வருவதாலும் கழிவுநீர் அதிகமாக வெளியேற்றப்படுவதால் வேட்டைகவுண்டன்புதூர் சாலையில் கழிவுநீர் வெளியேறி சாலையில் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படுகிறது. மேலும் அப்பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரும் இதே கழிவுநீர் குழாய் வாயிலாக வெளியேற்றப்படுகிறது. எனவே அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவுநீரினை உரிய மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்து பம்பிங் செய்து குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய் மூலமாக வெளியேற்றினால் அப்பகுதியில் சாலையில் கழிவுநீர் வெளியேறுவது தவிர்க்க இயலும். மேற்கண்ட பணிக்கு தேவைப்படும் பொருட்களை அடுக்குமாடி குடியிருப்பினர் தங்களது சொந்த பொறுப்பில் வாங்கி வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர். எனவே மேற்கண்டவாறு மோட்டார் மற்றும் பைப் லைன்கள் அமைத்து வேட்டைகவுண்டன்புதூர் சாலையில் கழிவுநீர் சாலையில் வெளியேறாமல் தவிர்க்கும் பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.10இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் நிதிநிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3940 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 458, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7:</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 எம்.ஜி.ஆர்.நகர், வார்டு எண்.37 பெரியப்பட்டி மற்றும் வார்டு எண்.21 லக்கம்பாளையம் ஆகிய பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் புதிய சமுதாய கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சமுதாய கழிப்பிடங்களை பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் வண்ணம் அதன் முகப்பு தோற்றத்தை அழகு படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடங்களில் முகப்பு தோற்றத்தினை அழகுப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 3939 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 459, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8:</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 முதலைப்பட்டிபுதூர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல் டைல்ஸ் பதித்தல், பைப் லைன் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3925 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 460, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9:</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கோட்டை துவக்கப்பள்ளியில் டைல்ஸ் பதித்தல், மின் வசதி செய்தல், பூச்சு வேலை மேற்கொள்ளதல், பைப் லைன் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3926 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 461, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 நல்லிபாளையம் கமலம் எடைநிலையம் எதிரே உள்ள சாலை மற்றும் மழைநீர் வடிகால் பழுதுடைந்து மழைக்காலங்களில் மழைநீர் சாலையில் வெளியேறி

பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3938 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 462, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மோகனூர் காவேரி ஆற்றிலிருந்து தினசரி 9எம்.எல்.டி குடிநீர் பம்பிங் செய்யப்படுகிறது. மேற்கண்ட குடிநீர் அணியாபுரம் நீருந்து நிலையம், காந்தி நகர், பாறை மேல்நிலை நிர்த்தேக்க தொட்டி மற்றும் பரமத்தி சாலை பிரதான தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றில் பொருத்தப்பட்டுள்ள குளோரின் பிளான்ட் மூலமாக பதப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. குளோரின் பிளான்ட்டில் பயன்படுத்த தேவையான 100கிலோ கொள்ளளவு கொண்ட குளோரின் கேஸ் சிலிண்டர்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3937 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 463, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 12 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35 மோகனூர் சாலை உபசந்து –4 திருநகர் பகுதியில் பாதாள சாக்கடை ஆய்வுக்குழி மற்றும் சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதுடன் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடை மனித ஆய்வுக்குழிகள் மற்றும் சிமெண்ட் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.65இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3935 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 464, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 13 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 போதுப்பட்டி கழிப்பிடம் மற்றும் பால் சொசைட்டி அருகில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் வெளியேறி பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் உள்ளது. மேலும் அப்பகுதி வழியாக பள்ளிக்கு செல்லும் பள்ளி குழந்தைகள் மிகவும் பாதிப்படைகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3934 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 465, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 14 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகாரமாகும் திடக்கழிவுகளை அளவீடு செய்து நுண்உரமையத்திற்கு அனுப்ப வேண்டியதின் அவசியம் கருதி சிறிய அளவிலான எடை இயந்திரங்கள் 10 எண்ணங்கள் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.20இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3933 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 466, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 15 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 கணேசபுரம் மாதாகோவில் தெருவில் குடிநீர் விநியோகப் பணிக்காக அமைக்கப்பட்டுள்ள HDPE டேங்க் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் புதிய டேங்க் பொருத்த

வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேலும் கல்லறை தெருவில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளதால் அவற்றை புதியதாக மாற்றி அமைக்க வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.65இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3932 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 467, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16 :</u>**

நாமக்கல் நகராட்சியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து மக்கும் திடக்கழிவுகள் நகரப்பகுதியில் உள்ள நான்கு நுண்உரக்கூடங்களில் உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்கண்ட பணியில் உரத்தினை காயவைத்து அதனை சலித்து பைகளில் நிரப்பப்பட்டு ''செழிப்பு'' என்ற பெயரில் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு பயன்படுத்தப்படும் நான்கு மின்விசை மூலம் இயங்ககூடிய சலிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3931 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 468, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கமலாலய குளத்தில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், செடிகள் மற்றும் இதர கழிவுகளால் குளம் மாசடைந்துள்ளது. மேற்கண்ட குளத்தில் உள்ள மாசுகளை அகற்றி குளத்தினை சுத்தம் செய்யவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.20இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3927 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 469, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை ஒப்பந்தமுறையில் தனியார் மூலமாக பராமரிக்கும் பணியை மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.23656/2013/டிஓ1, நாள்.27.09.2019 வாயிலாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்து முதல் முறையாக 29.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாக மூன்றாண்டுகளாக பராமரிப்பு பணிகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது ஆண்டு பராமரிப்பு பணிகள் 14.05.2023 உடன் முடிவடைய உள்ளதாலும், அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததரார்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு வரும் நிலையிலும், ஒப்பந்த ஆவணங்கள் அடிப்படையில் மேற்கண்ட ஒப்பந்ததாரர் TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாகவே மேலும் 6மாத காலத்திற்கு (15.05.2023 முதல் 14.11.2023 வரை) அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததரார்கள் அமர்த்த ஊதிய நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்தரார்கள் நியமிக்கும் காலம்வரை பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கான அனுமதியை நீட்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ஒருவருட காலத்திற்கு பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையின் அடிப்படையில் ரூ.19.90 இலட்சத்தில் 6 மாத காலத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட பணிக்களுக்கான ஒப்பந்த காலத்தை TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்திற்கு **6** மாத காலத்திற்கு **(15.05.2023** முதல் **14.11.2023** வரை) அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததராரர்கள் அமர்த்த ஊதியம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் புதியதாக ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் காலம்வரை நீட்டிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று TamilNadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 3573/2023/இ1)**

**தீர்மானம் எண் : 470, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19 :</u>**

நாமக்கல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதல் கட்ட சேகரம் செய்யும் பணிக்கு BOV வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் **10** வாகனத்திற்கு புதிய பேட்டரி கொள்முதல் செய்யவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**6.00**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3995 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 471, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 20</u>**

நாமக்கல் நகராட்சி 2022 – 2023ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி, ஆரம்பகல்வி நிதி ஆண்டுக் கணக்குகள் தாயர் செய்து கொடுப்பதற்கு 12.06.2023 ஆம் தேதிய விலைப்புள்ளி அறிவிப்பின் மூலம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சஞ்சய் சொல்யூசன்ஸ்,<br>ஹ.அழகர்சாமி,<br>குமாரபாளையம் | 2,00,000/– |
| 2 | ராஜ் சொல்யூசன்ஸ்,<br>ஆர். சதீஸ்குமார்,<br>சென்னை. | 2,10,000/– |
| 3 | ஒசோன் டெக்னாலஜீஸ்,<br>கோட்டூர், சென்னை | 2,15,000/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் காணும் சஞ்சய் சொல்யூசன்ஸ் விலைப்புள்ளி மற்றும் இரண்டு விலைப்புள்ளிகளைவிட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் கணக்குகள் தயார் செய்து பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.3166 /2023/பி1)**

**தீர்மானம் எண் : 472, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**